நாள்: 23.02.2026

அ.வ.எண்:22 /2020

வா.சா.1 –

செந்தில்நாதன்

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

**<u>1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. நான் தற்போது ராம் நகரில் உள்ள கே.கே.எஸ் காம்ப்ளக்ஸில் குடியிருந்து வருகிறேன். தாவா வழக்கின் இரண்டாம் வாதி எனது மனைவி என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்திற்கான விபரங்களை நான் தான் கூறினேன் என்றால் சரிதான். நான் B.com படித்துள்ளேன். நான் குடியிருந்து வரும் கே கே எஸ் காம்ப்ளக்ஸ் எனக்கு சொந்தமானது என்றால் சரிதான். தாவா சொத்து எங்கு அமைந்துள்ளது என்றால் கண்டதேவி பஞ்சாயத்து சிறுமருதூர் குரூப் சிறுமருதூர் கிராமத்தில் அமைந்துள்ளது. தாவாசொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும் புதிய சர்வே எண் 157/2 ஆகும். தாவாசொத்தின் வடக்கு பகுதியில் புறம்போக்கு இடமும், தெற்கு பகுதியில் புறம்போக்கு இடமும், மேற்கில் சிறுமருதூர் கண்மாயும்,கிழக்கு பகுதியில் புறம்போக்கு இடமும் அமைந்துள்ளது, இவை தாவா சொத்து வாங்கிய பொழுது இருந்த

நான்கு மாலாகும்.

2. தாவா சொத்தில் என்ன உள்ளது என்றால் ஓட்டு வீடு கட்டப்பட்டு, செட் அமைக்கப்பட்டு தேக்கு மரம், தென்னை மரம், நாவல் மரங்கள் வைத்து வளர்க்கப்பட்டு வருகிறது. தாவா சொத்தில் அமைந்துள்ள வீட்டின் விஸ்தீரணம் என்ன என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் முத்துராமலிங்கம் என்பவருக்கு பாத்தியப்பட்டது. மேற்படி முத்துராமலிங்கம் இறந்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி முத்துராமலிங்கத்திற்கு எத்தனை வாரிசுகள் என்றால் நான்கு வாரிசுகள் உள்ளனர். சொர்ணலிங்கம், ராஜரத்தினம் மற்ற இரண்டு நபர்கள் பெயர் நினைவில் இல்லை. தாவா சொத்து யாரால் யாரிடமிருந்து கிரயம் பெறப்பட்டது என்றால் 1987 ஆம் வருடம் எனது தகப்பனாரால் என் தாயின் பெயரில் கிரயம் வாங்கப்பட்ட சொத்து ஆகும். என் தாயின் பெயர் கண்ணாத்தாள் ஆகும். என் தந்தையின் பெயர் காசி ஆகும்.

3. எனக்கு தற்போது 53 வயதாகிறது. தாவா சொத்து வாங்கும் பொழுது எனக்கு என்ன வயது இருக்கும் என்றால் 15 வயது இருக்கும். தாவா சொத்தை கிரையம் வாங்கும் பொழுது நான் படித்துக் கொண்டுதான் இருந்தேன் என்றால் சரிதான், பத்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். நான் படிக்கும்போது மாணவர் விடுதியில் தங்கி படித்தேன் என்றால் சரியல்ல. என்னுடன் கூட

பிறந்த சகோதரிகள் ஐந்து பேர். நான் படித்துக் கொண்டிருக்கும் போது எனக்கு வேலை கிடைத்துவிட்டது என்றால் சரிதான், கல்லூரியில் இரண்டாம் ஆண்டு படிக்கும் பொழுது வேலை கிடைத்து விட்டது. எனக்கு என்ன வேலை கிடைத்தது என்றால் மத்திய ரிசர்வ் போலீஸ் (CRP) ஆக வேலை கிடைத்தது எனக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் 2009 ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. எனக்கு எத்தனை குழந்தைகள் உள்ளது என்றால் ஒரு பெண் குழந்தை உள்ளது. எனது மனைவியின் பெயர் கவிதா ஆகும்.

4. இந்த திருமணத்திற்கு முன்பு எனக்கு கௌரி என்று ஒரு மனைவி இருந்தார் என்றால் சரியல்ல. எனக்கு கௌரி என்ற ஒரு மனைவி இருந்தார் என்றும் அவருக்கு ஒரு குழந்தை இருந்தார் என்றும் நான் அதை மறைத்து விட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலத்தின் மூன்றாவது பக்கத்தில் இரண்டாம் வாதி எனக்கு சட்டபூர்வ மனைவி என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் மனைவி என்று குறிப்பிடாமல் எதனால் சட்டபூர்வ மனைவி என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் அதை வழக்கறிஞர் அடித்துள்ளதால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் மத்திய போலீஸ் ரிசர்வ் படையில் (CRP) எத்தனை ஆண்டு வேலை பார்த்தேன் என்றால் ஐந்து வருடம் மூன்று மாதங்கள் வேலையில் இருந்தேன். அதன்

பிறகு நான் என்ன வேலை பார்த்தேன் என்றால் வெளிநாடு சென்று தொழில் செய்து வருகிறேன்.

5. நான் வெளிநாடு சென்ற பொழுது எனது தகப்பனார் மற்றும் சகோதரிகள் தான் எனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை இங்கு பராமரித்து வந்தார்கள் என்றால் சரிதான். நான் வெளிநாட்டில் இருந்ததால் ராம் நகரில் உள்ள கே.கே.எஸ்.காம்ப்ளக்ஸ் எனது தகப்பனார் பெயரில் வாங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி காம்ப்ளக்ஸ் கட்டுமானத்திற்காக எனது பெற்றோர் 50% பணம் செலவு செய்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் வெளிநாட்டிற்கு வேலைக்கு சென்று விட்டதால் தாவாசொத்தில் உள்ள மரங்களை நான்தான் நட்டு பராமரித்து வரவில்லை என்றும் என் பெற்றோர்தான் அவற்றை நட்டு பராமரித்து வந்தனர் என்றும் சொன்னால் சரிதான். நான் மத்திய ரிசர்வ் போலீஸ் படையிலிருந்து தகவல் சொல்லாமல் வெளியே வந்து விட்டதால் அது குறித்து பல கடிதங்கள் எனது வீட்டிற்கு வந்தது என்று சொன்னால் சரிதான்.

6. எனது முதல் சகோதரியின் திருமணத்தின் போது நான் சிறு வயதினராக இருந்ததால் அதில் எனது பங்களிப்பு எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல அப்பொழுது எனக்கு 21 வயது ஆகும். நான் இரண்டாம் ஆண்டு கல்லூரி படிப்பை எந்த வருடம் முடித்தேன் என்றால் 1993 ஆம் ஆண்டு முடித்தேன். எனது முதல் சகோதரிக்கு எப்பொழுது திருமணம் நடைபெற்றது என்றால் 1991

ஆம் ஆண்டு நடைபெற்றது. நான் வெளிநாட்டில் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் ஹோட்டல் வைத்து தொழில் செய்கிறேன் அதற்காக இங்கிருந்து ஆட்களை அழைத்து செல்வது வழக்கம் என்றால் சரிதான். எனக்காக மேற்படி ஹோட்டலுக்கு ஆட்களை கண்டு அனுப்பி வைத்த வேலை செய்து வந்தது எனது 4 வது சகோதரி பஞ்சவர்ணம் என்று சொன்னால் சரிதான். நான் வெளிநாட்டில் வேறு வேலைகளுக்கும் இங்கிருந்து ஆட்களை அனுப்பி வைப்பது வழக்கம் என்று சொன்னால் சரியல்ல.

7. எனது இரண்டாவது சகோதரி அமுதா இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவரது திருமணத்திற்கு பிறகு இறந்து விட்டார். அவருக்கு வாரிசுகள் ஏதும் இல்லை என்றால் சரிதான். அவருக்கு கொடுத்த நகை மற்றும் பண்ட பாத்திரங்கள் அனைத்தையும் நான் தான் பெற்றுக் கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. நான் என் திருமணத்திற்கு பிறகு என் பெற்றோரை சரிவர கவனிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் என் பெற்றோரை சரிவர பார்த்துக் கொள்ளாததால் அவர்கள் என்னிடம் பாதுகாப்பு கேட்டு என் மீது முதியோர் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். தாவா சொத்து எனது பெற்றோரின் உழைப்பில் வாங்கப்பட்டதால் தான் எனது தாயார் பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். தாவா சொத்து எனக்கு வேண்டும் என்று நான் தகராறு செய்ததால் எனது

பெற்றோர் இதே நீதிமன்றத்தில் ஓ.எஸ். 38/2010 என்ற வழக்கை நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரம் கேட்டுதாக்கல் செய்தனர் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் என்ன தீர்ப்பு ஏற்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

8. மேற்படி வழக்கு எனக்கு பாதகமாகவும் எனது பெற்றோருக்கு சாதகமாகவும் தீர்ப்பளிக்கப்பட்டது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் எனது பெற்றோரை அடித்ததால் பிரச்சினை வேண்டாம் என்று எனது பெற்றோர் ராம்நகரில் உள்ள கே.கே.எஸ் காம்ப்ளக்ஸை எனக்கு எழுதி கொடுத்தனர் என்றால் சரியல்ல. தற்போது மேற்படி காம்ப்ளக்ஸ் யார் பெயரில் உள்ளது என்றால் என் பெயரில்தான் உள்ளது. பெரியோர்கள் முன்னிலையில் 15 லட்சம் ரூபாய் ரொக்கமாக கொடுத்து மேற்படி காம்ப்ளக்ஸ் என் பெயரில் எழுதி வாங்கப்பட்டது. மேற்படி காம்ப்ளக்ஸில் எத்தனை கடைகள் உள்ளது என்றால் 12 கடைகளும் 1 வீடும் உள்ளது. மேற்படி காம்ப்ளக்ஸ் நான் எழுதி வாங்கும் பொழுதே சுமார் 2 கோடி ரூபாய் மதிப்பு பெறும் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி காம்ப்ளக்ஸ் மெயின் ரோட்டில் உள்ளது என்றால் சரிதான்.

9. நான் தாவா சொத்திற்கு மேற்படி 15 லட்சம் ரூபாய் கொடுத்தேனா அல்லது காம்ப்ளக்ஸிற்காக கொடுத்தேனா என்றால் இரண்டு இலக்கு சொத்திற்கும் சேர்த்து தான் 15 லட்ச ரூபாய் ரொக்கமாக கொடுத்தேன் . நான் எழுதிக் கொடுத்த ஒப்பந்தத்தில் என் பெற்றோர் வசித்து வரும்

சிறுமருதூர் வீட்டிற்கு செல்ல மாட்டேன் என்று எழுதிக் கொடுத்து உள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஒப்பந்தத்தில் தாவா சொத்து சம்பந்தமாக எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் எழுதிக் கொடுத்த உறுதிமொழி பத்திரத்திற்கும் தாவாசொத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. என் பெற்றோர் தாக்கல் செய்த வழக்கில் நான் ஆஜராகாமல் தோன்றா தரப்பினராக உள்ளேன் என்றால் சரிதான். நான் எதனால் ஆஜராகவில்லை என்றால் அனைவரும் ஊர் பெரியவர்கள் முன்னிலையில் சமரசமாக சென்று விட்டதால் வழக்கை மேல் நடத்த வேண்டாம் என்று உறுதிமொழி பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளனர் அதனால் நான் ஆஜராகவில்லை. மேற்படி பத்திரத்தை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

10. மேற்படி ஓ.எஸ்.38/2010 என்ற வழக்கின் தீர்ப்பின் நகலை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது எனக்கு கிடைக்கவில்லை அதனால் தான் தாக்கல் செய்யவில்லை. மேற்படி வழக்கின் சொத்தில் எனக்கு உரிமை இல்லாததால் தான் அதில் நான் ஆஜராகவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா வழக்கில் நான் என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் தாவா சொத்துக்கள் தொடர்பாக எந்தவித விற்பனையும் செய்யக்கூடாது என்றும் ஆவணங்களும் பதிவு செய்யக்கூடாது என்றும் பரிகாரம் கேட்டு நான்

வழக்கு தாக்கல் செய்து உள்ளேன். எனது சம்பாத்தியத்திற்கு முன்பே தாவா சொத்து எனது பெற்றோரால் வாங்கப்பட்டதால் எந்த அடிப்படையில் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது தங்கைகளின் தேவைக்காக ஒவ்வொரு சொத்தாக விற்றுக் கொண்டு வந்தார்கள், நான் மலேசியாவில் நன்றாக சம்பாதித்து வந்ததால் சொத்துக்களை விற்க வேண்டாம் என்று சொல்லி நானே எனது செலவில் எனது சகோதரிகளுக்கு திருமணம் செய்து வைத்தேன். அதனால் மேற்படி தாவாசொத்தில் எனக்கு உரிமை உள்ளது என்று கூறி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

11. எனது முதல் சகோதரி திருமணத்திற்கு நான் வரவில்லை என்றால் சரியல்ல. ஸ்ரீ ரங்கத்தில் நடைபெற்ற திருமணத்திற்கு நான் வந்தேன்.

நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் எனது இரண்டாவது தங்கையின் திருமணத்திற்காக வீட்டில் உள்ள ஆடு மாடுகள் அனைத்தையும் விற்பனை செய்து திருமணம் செய்து வைத்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது 4 வது சகோதரி என்னுடன் சேர்ந்து தொழில் செய்ததில் வந்த வருமானத்தில் தான் திருமணம் செய்து கொண்டார் என்று சொன்னால் சரியல்ல. நான் தாவா சொத்து எனக்கு வேண்டும் என்று சொல்லி தகராறு செய்ததால் எனது பெற்றோர் எனது ஐந்தாம் சகோதரிக்கு தாவா சொத்தைப் பொறுத்து இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்தனர் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி இனம்

செட்டில்மெண்ட் தொடர்பாக நான் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்து ஐந்தாம் சகோதரிக்கு தொந்தரவு கொடுத்ததால் அவர் தாவாசொத்தை மீண்டும் எனது பெற்றோருக்கு இனாம் செட்டில்மெண்டாக எழுதி கொடுத்து விட்டார் என்று சொன்னால் சரிதான்.

12. நான் எனது பெற்றோருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை விற்கக் கூடாது என்று நாளிதழில் விளம்பரம் கொடுத்ததால் ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்தை 25 லட்ச ரூபாய்க்கு விற்றார்கள் என்று சொன்னால் சரிதான். நான் இதேபோன்று பல சொத்துக்கள் சம்பந்தமாக 10 ற்கும் மேற்பட்ட வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து சம்பந்தமாக நான் பிரச்சனை செய்தது தொடர்பாக குற்றவியல் நீதிமன்றத்தில் என் மீது வழக்கு உள்ளது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு உரிமை இல்லை என்றும் தாவாசொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்து சம்பந்தமாக முன் தீர்ப்பு தடை ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கும் எனக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றும் என் வயது முதிர்ந்த பெற்றோர் மற்றும் சகோதரிகளை அச்சுறுத்த வேண்டும் என்பதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை</u>**

5,6 பிரதிவாதிகள் தரப்பில் யாரும் ஆஜரராகததால் குறுக்கு விசாரணை குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2026.02.23 16:55:00 +0530